**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 166/2021** **நாள்.16.02.2024**

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | அர்ஜுனகவுண்டர் | சாதி | |
| கிராமம் | களையூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 76 |

**வ.சா.1**

**குறுக்கு விசாரணை**

I. நான் மேல்சித்தாமூரில் எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். வீட்டு மனை பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வீட்டு மனை என் தாத்தாவும் , அப்பாவும் சம்பாதித்ததாக சொல்லியுள்ளேன். என் பெற்றோருக்கு 2 ஆண்கள், 4 பெண்கள் . வாரிசுகள் ஆவார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பூர்வீக சொத்துக்களை என் தகப்பனார் இறந்த பிறகு 35 ஆண்டுகள் கழித்து பாகம் பிரித்துக்கொண்டோம். 35 ஆண்டுகளுக் குபிறகு பாகம் பிரித்துக்கொண்டதாக வழக்குரையிலும் நிரூப ணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. என் தகப்பனர் 1957 ல் இறந்தார். என் தாயார் 1958 ல் இறந்தார். என் பெற்றோர் உயிருடன்இருந்த போது என் சகோதிரி கோவிந்தம்மாள் என்பவருககு மட்டும் திருமணம் ஆகியிருந்தது. என் தகப்பனார் இறந்த போது எனக்கு 10 வயது இருக்கும். அப்போது நான் களையூர் பள்ளியில் படித்து கொண்டிருந்தேன். என் சகோதரர் 1ம் பிரதிவாதி 14 வயது எனக்கு மூத்தவர் ஆவார். என் தகப்பனார் இறக்கும் போது 1ம் பிரதிவாதிக்கு 24 வயது ஆகும். என் தகப்பனார் இறந்த பிறகு குடும்பத்தில் மூத்த ஆண் 1ம் பிரதிவதி தான். என் பெற்றோர் இறந்த பிறகு எனக்கும் , என் சகோதிரிகளுக்கும் வருமானம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அப்போது 1ம் பரிதிவாதி தான் குடும்ப நிர்வாகத்தை கவனித்து வந்தார். 1ம் பிரதிவாதி தான் மற்ற சகோதிரிகளுக்கு திருமணம் செய்து வைத்தார் . எனக்கும் 1ம் பிரதிவாதி தான் திருமணம் செய்து வைத்தார். 1965,1966 ல் பள்ளி படிப்பு முடித்தேன். திருவம்பட்டை சேர்ந்த வழக்கறிஞர் முனுசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு நண்பர் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் முனுசாமி என்பவர் மூலமாக 1ம் பிரதிவாதி எனக்கு நூற்பு

ஆலையில் வேலை வாங்கி கொடுத்தார். எனக்கு 1975 ஆண்டு திருமணம் நடந்தது. திண்டிவனத்தில் உள்ள வீடு என் திருமணத்திற்கு பிறகு கட்டப்பட்டது. 35 ஆண்டுகளுக்கு முன்பு பூர்வீக சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது 1ம் பிரதிவாதியிடம் உள்ளது.

II. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணங்கள் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. பூர்வீக சொத்துக்கள் என்பதற்கான ஆவணங்களை சான்றிட்ட நகல்களை பெற்று தாக்கல் செய்யவில்லை . பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான பட்டா 1984 ல் யுடிஆர் காலத்தில் பட்டா மாறி 30 வருடங்களாக 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. வழக்கு சொத்துக்களுக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதை ஆட்சேபனை செய்து வருவாய் துறையில் மனு எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு சொத்தில் தற்போது 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். அந்த வீட்டை குறித்து வழக்குரையில் சொல்லவில்லை. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்களை எனக்கு படித்து காண்பித்தார்கள்.

III. தற்போது உயிருடன் உள்ள 2 சகோதிரிகளையும், இறந்து போன 2 சகோதிரிகளின் வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை . என் சகோதிரிகள் பாகம் வேண்டாம் என்று சொன்னதற்கு எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வழக்குரையில் சொத்தை விற்று என் சகோதிரி அலமேலு என்பவருக்கு திருமணம் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் சகோதிரி திருமணத்திற்காக சொத்தை விற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை . என் சகோதிரி ரூக்கு என்பவருக்கு 80 செண்ட் எழுதிவைத்ததாக என் வழக்குரையில் சொல்லவில்லை . அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை . என் சகோதிரி ராமாயி என்பவருக்கு போகியம் வைத்து திருமணம் செய்து வைத்ததாக வழக்குரையில் சொல்லவில்லை . அதற்கான ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை . என் சகோதிரிகளையும் , இறந்து போன சகோதிரிகளின் வாரிசுகளையும் தரப்பினராக சேர்க்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. சுமார் 40 வருடங்களுக்கு முன்பு பாகம் பிரித்து கொண்டோம். 1973 ம் ஆண்டில்பெண்களுக்கு பாக உரிமையில்லை . திண்டிவனத்தில் 1985 ம்ஆண்டு வீடு கட்டினேன்.

IV. 1975 ம் ஆண்டு பாகம் பிரிந்ததாக சொல்லுவது உண்மையில்லை என்றாலும் அதற்கான ஆவண்ங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் திண்டிவத்தில் என் அண்ணன் உதவியோடு வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. திண்டிவனத்தி'ல உள்ள வீட்டை இவ்வழக்கில் சேர்க்காததால் பகுதி பாக பிரிவினை கோட்பால் வழக்கு பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பாகம் பிரிந்த பின்பு வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு அரசால் பட்டா வழுங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஏற்கனவே என்ன வகைபாடாக இருந்தது என்ற எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பயன்படுத்த முடியாத நிலமாக இருந்து 1ம் பிரதிவாதி அதை சீர்திருத்தம் செய்து ஆர்ஜிதம் செய்த வகையில் 1ம் பிரதிவாதிக்கு அரசால்பட்டா வழுங்கப்பட்ட சொத்து என்றாலும் அதில் எனக்கு எந்த பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அனுமானத்திதிற்காக வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்று எடுத்துக்கொண்டாலும் 60 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில உள்ளதால் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா 40 வருட காலமாக 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதாலும் அதை நான் ஆட்சேபனை செய்யாததாலும் வழக்கு சொத்தில் பாக உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் வீடு இருப்பதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.